# நோயாளிக்குத
# தகவல்

## சிகிச்சை மருந்து:

# உயர் இரத்த அழுத்தம்

*அன்ஜியோடென்சின் II ரிசப்டர் புளோக்கர்ஸ்*



Medicine To Treat: Hypertension - **Angiotension II Receptor Blockers**

## அன்ஜியோடென்சின் II ரிசப்டர் புளோக்கர்ஸ் எதற்குப் பயன்படுத்தப்படுகின்றன?

இவை இரத்த அழுத்தத்தைக் குறைக்கப் பயன்படுத்தப்படும் புதிய வகை மருந்துகள். இரத்த நாளச் சுவர்களில் அன்ஜியோடென்சின் II எனப்படும் ஒரு பொருளின் செயலை இவை தடுக்கின்றன. அதனால் இரத்த நாளங்கள் குறுகுவதை இவை தடுக்கின்றன.

## அன்ஜியோ-டன்சின் II ரிசப்டர் புளோக்கர்ஸ் மருந்துகளின் சாத்தியமான பக்கவிளைவுகள் யாவை?

பக்கவிளைவுகள் குறைவே என்றாலும் எழுந்து நிற்கும் சமயங்களில் தலைசுற்றல், கிறுகிறுப்பு உள்ளிட்டவை ஏற்படலாம்.

## எத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை நான் எடுக்க வேண்டும்?

நீங்கள் கருவுற்றிருந்தால் அல்லது கருவுறத் திட்டமிட்டிருந்தால் உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். இந்த மருந்தை அதிக அளவு டையூராடிக்ஸ் மருந்துடன் சேர்த்து உட்கொள்ளக்கூடாது. அவ்வாறு உட்கொண்டால் தாழ்ந்த இரத்த அழுத்தத்தை ஏற்படுத்திவிடக்கூடும்.

*குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் மருந்துகளை வைத்திருங்கள்*

## வழக்கமாகப் பயன்படுத்தப்படும் அன்ஜியோடென்சின் II ரிசப்டர் புளோக்கர்ஸ் மருந்துகள் யாவை?

- லோஸர்ட்டான்
- இர்பெஸர்ட்டான்
- வால்ஸர்ட்டான்

## நான் ஒருமுறை மருந்தை பயன்படுத்த மறந்து விட்டால் என்ன செய்வது?

- அவ்வாறு மருந்தை உட்கொள்ள மறந்தால் உங்களுக்கு நினைவு வந்தவுடன் உட்கொண்டு விடுங்கள். ஒருசமயம் அடுத்த வேளைக்கான மருந்தை உட்கொள்ள வேண்டிய காலகட்டம் வந்துவிட்டால் வழக்கமான அளவை உட்கொள்ளுங்கள். மருந்தின் அளவை இரட்டிப்பாக்காதீர்கள்.

## என்னுடைய மருந்துகளை எப்படி பாதுகாக்க வேண்டும்?

- வேறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலன்றி மருந்தை வெப்பம் குறைவான, ஈரமற்ற இடத்திலும் நேரடி சூரிய ஒளிபடாத இடத்தில் வைக்கவும்.
- அதற்குரிய ஒட்டுவில்லையுடைய உரைகலத்தில் வைத்திருங்கள். வெவ்வேறு விதமான மருந்துகளை ஒரே உரை, கலத்தில் சேர்த்து வைக்கக்கூடாது.

*காலாவதியான அல்லது இனியும் தேவைப்படாத மருந்துகளை ஒதுக்கி விடுங்கள்*

SingHealth Ministry Of Health National Healthcare Group

Printed in 2002